**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 134/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.8 |
| Name | : | திரு . சிவசுப்ரமணியன் (கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஓய்வு) |
| Father's/Husband Name: | | திரு. தேவர்பிரான் |
| Village | : | திருச்சி |
| Taluk | : | திருச்சி |
| Age | : | 61/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(1ம் எதிரி மனோஜ்குமார் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது திருச்சியில் வசித்து வருகிறேன். கடந்த 28.02.2025ம் தேதியன்று தஞ்சாவூர் சைபர் கிரைமில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணி செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2017ம் வருடத்தில் பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்ட காவல் ஆய்வாளராக பணியிலிருந்தேன். 23.07.2017ம் தேதியன்று மங்களமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக தவமணி என்பவர் பணியிலிருந்தார். அவர் தற்போது பணிமாறுதல் பெற்று வேறு காவல்நிலையத்தில் பணி செய்து வருகிறார். மேலும் இவ்வழக்கில் முதல் புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ஞானசேகர் மற்றும் இவ்வழக்கில் 2ம் எதிரியை கைது செய்த காவல் ஆய்வாளர் ராஜ்குமார் மற்றும் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்த மகாலெட்சுமி காவல்

ஆய்வாளர் ஆகியோர் வெவ்வேறு மாவட்ட காவல் நிலையத்தில் பணி செய்து வருவதாலும் இந்த வழக்கு நீண்ட காலமான நிலுவையில் இருந்து வருகிறது என்பதாலும் இவ்வழக்கில் நான் புலன் விசாரணை மேற்கொண்டதாலும் மேற்படி நபர்களுடைய கையெழுத்து கையொப்பம் எனக்கு நன்கு பரிசித்தம் என்பதாலும் மேற்படி நபருக்காகவும் எனக்காகவும் நான் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

உதவி ஆய்வாளர் தவமணி என்பவர் கடந்த 23.07.2017ம் தேதியன்று நிலைய பொறுப்பிலிருந்த போது சாட்சி செல்வம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று அதனை பரிசீலனை செய்து அதன் தன்மைக்கேற்ப மங்கமேடு காவல் நிலைய குற்ற எண் 416/2017 இதச பிரிவு 392 ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார். நிலையத்தில் உதவி ஆய்வாளர் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் காவல் ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சின்னதுரை, மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அது **மாதிரி வரைபடம் அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் செல்வம், அறிவழகன், கொளஞ்சி, ராமலிங்கம், சின்னதுரை, மகேந்திரன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் குன்னம் காவல் நிலைய குற்ற எண் 440/2017 என்ற குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி மனோஜ்குமார் என்பவர் இந்த குற்ற வழக்கிலும் சம்மந்தப்பட்டவர் என்பவரை அறிந்து உரிய சட்டப்படியான நடைமுறைகளை பின்பற்றி அவரை கடந்த 13.09.2017ம் தேதியன்று கைது செய்தேன். அவர் தானாக முன்வந்து சாட்சிகள் சோலைக்கண்ணு, சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் **அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினம் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக இவ்வழக்கு சொத்துக்களான 3/4 பவுன் தாலி ஒன்று, ஒரு 4 பவுன் தாலிச்செயின் ஒன்று 1/4 பவுன் தங்க மாங்காய் இரண்டு, ஒரு கிராம் தங்க குண்டு இரண்டு ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை உரிய வழியாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். கைப்பற்றப்பட்ட மேற்கண்ட

வழக்கு சொத்தினை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. அந்த **படிவம் 91 அ.சா.ஆ11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு சொத்துக்களை காட்டும் புகைப்படத்தில் உள்ள வழக்கு சொத்துக்கள் **அ.சா.பொ.1 (வரிசை எண்ணிக்கை 4) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இந்த வழக்கின் 2ம் எதிரி ராஜேஷ் என்பவரை காவல் ஆய்வாளர் ராஜ்குமார் என்பவர் கைது செய்து அவரிடமிருந்து சாட்சிகள் மணிமாறன், தாமரைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று பெறப்பட்டது. அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 2ன் எதிரி உரிய வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பின்னர் உரிய சட்ட வழிகளை பின்பற்றி அடையாள அணிவகுப்பு கூடுதல் மகிளா நீதிமன்ற நடுவர் மூலமாக நடத்தப்பட்டது. அந்த **அடையாள அணிவகுப்பு நடைமுறை அசல் அ.சா.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மற்ற சாட்சிகளை விசாரித்து கடந்த 26.03.2018ம் தேதியன்று எதிரிகளின் செய்கையானது இதச பிரிவு 392ன்படி குற்றமென இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி மனோஜ்குமாரின் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தான் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அ.சா.6 சிவக்குமார் போலிசார் விசாரிக்கவில்லை என்றும் என் முன்னிலையில் யாரையும் கைது செய்யவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் என் முன்னிலையில் எதுவும் கைப்பற்றவில்லை என்று சொல்லி முதல் விசாரணையில் பிறழ் சாட்சியம் ஆகியுள்ளார் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சாட்சி கையொப்பம் மட்டும் தான் போட்டுள்ளேன் என்று சொல்லியுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தை வீடியோ மற்றும் ஆடியோ மூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி பேசிய மொழி நடையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எதிரிக்கெதிராக பயன்படுத்தப்படும் என்று எதிரியிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை காவல்நிலையத்தில் வைத்து அடித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளேன் என்றாலும் அதனால் தான் அ.சா.6 சிவக்குமார் பிறழ்சாட்சியாகியுள்ளார் என்றால் சரியல்ல. அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு முன்பே எதிரி எந்த வரிசையில் எத்தனாவது

ஆளாக நிற்கிறார் என்று ஏற்கனவே நிகழ்வுநிலை புகார்தாரருக்கு குற்றவியல் நீதித்துறை நடுவர் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு முன்பே சொல்லி பொய்யாக எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்க சொல்லிக் கொடுத்து இருப்பீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.